# அருணோதயம்




**மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**

**ஆரம்பக்கல்வி பிரிவு - 2026**

## முன்னுரை

ஆரம்பக்கல்வி என்பது முழு வாழ்வினதும் எதிர்கால கற்றல் நடவடிக்கைகளினதும் அடிப்படையாகும். அதனை வலுப்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு காரணிகளால் கற்றல் கற்பித்தல் இடர்படும். நான்காம் தர மாணவர்களுக்காக அடைவு மட்டத்தை மேம்படுத்தும் வகையில் இச்செயற்பாட்டு நூலை தயாரித்து வழங்குவதில் மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

எல்லா பிள்ளைகளிடமும் பலவித ஆற்றல்கள் காணப்படுகின்றன. சில வேலை அவர்கள் கற்றலில் இடர்படும் நிலை காணப்படுமாயின் அவர்களிடம் ஆற்றல் இல்லை என்று தீர்மானித்தல் தவறாகும். கற்பதற்கான விஷேட கற்றல் முறை ஒன்று அவர்களுக்கு அவசியம் என்பதே காரணமாகும். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் மாணவர் மையக் கல்வியில் இலகுவானதிலிருந்து படிப்படியாக மேலே கொண்டு செல்ல வேண்டும் என்பது முக்கியமாகும்.

புதிய கல்விச் சீர்த்திருத்தத்தில் எந்த ஒரு மாணவரும் கற்றல் நடவடிக்கைகளில் இடர்படாது பொதுவான கற்றல் சந்தர்ப்பங்களை நோக்கி நகர வழிப்படுத்துவது எமது தலையாய பொறுப்பாகும். அதற்கமைய இச் செயலட்டைகள் தயாரித்து வழங்கப்படுகிறது. எமது மாணவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டாக வேண்டும் என பிரார்த்தனை செய்து ஆசிர்வதிக்கின்றேன்.

W.A.D.B. மஞ்சுலா குமாரி வனசிங்க

பிரதிக் கல்விப் பணிப்பாளர்

மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**ஆலோசனை**

- M.I.D.D.C. இத்தமல்கொட — மாகாண கல்விப் பணிப்பாளர், மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
- வி. உபாலி அமரதுங்க — மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்), மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
- பிரியங்கிகா வன்பொலகே — பிரதிக்கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி), மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**வழிகாட்டலும் மேற்பார்வையும்**

- W.A.D.B.குமாரி வணசிங்க — பிரதிக் கல்விப் பணிப்பாளர், மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
- M.T.M. தௌசீர் — பிரதிக் கல்விப் பணிப்பாளர் – களனி கல்வி வலயம்

**திட்ட வடிவமைப்பு, அமைப்பாக்கம் மற்றும் வழிநடத்தல்**

- டப்ளியூ. ஏ. டி. பி. எம். கே. வனசிங்க — பிரதிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பப் பிரிவு), மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**செயற்பாட்டுத் தாள்கள் தயாரித்தல், கணினி தட்டச்சு மற்றும் செவ்வை பார்த்தல்**

- மொஹமட் மூஸீன் பாதிமா பஹமிதா — மேல்/கம் தாருஸ்ஸலாம் ஆரம்ப பாடசாலை - திஹாரிய
- திருமதி $R$. மொணிலா — மேல்/கள றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் வத்தளை
- திருமதி எம்.எச்.ஆருசியா பேகம் — மே/கள அல்-அஷ்ரப் மகா வித்தியாலயம் மாபோல
- திருமதி எஸ்.அனுஷா பிரியதர்ஷனி — மே/கள அல்-அஷ்ரப் மகா வித்தியாலயம் மாபோல
- திருமதி எம்.வை.ஜீனத் பானு — மேல்/கம் தாருஸ்ஸலாம் ஆரம்ப பாடசாலை - திஹாரிய
- திருமதி எம்.ஏ.எஸ்.பிர்தௌஸியா — மே.மா/கம்/குமாரிமுல்லை முஸ்லிம் மகா வித்தியாலயம் பூகொடை

- திருமதி. எம்.எம்.நாதிரா பேகம் — மே.மா/கம்/குமாரிமுல்லை முஸ்லிம் மகா வித்தியாலயம் பூகொடை
- திருமதி. கே.கிருஷ்னவேணி — மே.மா/களு/அல்-முஸ்தபா மகா வித்தியாலயம் யடிஹேன, மல்வானை

## கணினி வடிவமைப்பு மற்றும் முன் அட்டை தயாரிப்பு

- திரு. சி.சிவபாலன் — மே.மா/களு/அல்-முஸ்தபா மகா வித்தியாலயம் யடிஹேன, மல்வானை
- செல்வி எம்.ஜெய்கீர்த்தனா — மே.மா/களு/அல்-முஸ்தபா மகா வித்தியாலயம் யடிஹேன, மல்வானை

விசேட அவதானத்திற்கு

'அருணோதய' செயற்பாட்டுத் தாள் தொகுப்பைப் பயன்படுத்துவதற்கான ஆசிரியர்களுக்கான பொது அறிவுறுத்தல்கள்:

✓ 3 மற்றும் 4 ஆம் தரங்களின் தாய்மொழி மற்றும் கணிதப் பாடத்திட்டங்களுக்கு இணங்க இந்த 'அருணோதய' செயற்பாட்டுத் தாள் தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

✓ எளிய மட்டத்திலிருந்து முறையான முறையில் படிப்படியாக பிள்ளைகளைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தக் கூடிய வகையில் இந்தச் செயற்பாட்டுத் தாள்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

✓ பிள்ளையின் மட்டத்தை சரியாகக் கண்டறிந்து, அவர்கள் சோர்வடையாதவாறு மிகவும் நிதானமாகவும் அன்பாகவும் இச்செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் திறன்களின் தேர்ச்சியை மேலும் உறுதிப்படுத்துவது முக்கியமாகும்.

✓ இதில் உள்ள செயற்பாடுகளை ஆசிரியரின் விருப்பத்திற்கேற்ப பிள்ளைகளின் மட்டத்திற்கு ஏற்ப மாற்றி அமைக்க முடியும். இச்செயற்பாட்டுத் தாள் புத்தகத்தில் உள்ள பயிற்சிகளை மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் (செயற்பாடு சார்ந்ததாக) பிள்ளைகளுக்கு அதனை மேலும் உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

✓ உங்களுக்கு வசதியான முறையில் நேரத்தைப் பயன்படுத்தி, மாணவர்களுக்கு மிகவும் சுவாரசியமான முறையில் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். அத்துடன் பிள்ளை பெறும் முன்னேற்றத்தைக் கண்காணித்து, அவர்களுக்குத் தேவையான பின்னூட்டத்தை (குநநனடியஉம) உடனுக்குடன் வழங்க வேண்டும்.

✓ 'அருணோதய' செயற்பாட்டுத் தாள் தொகுப்பை ஒருபோதும் வீட்டுப் பணியாக (ர்ழஅந றழசம) வழங்கக் கூடாது என்பதுடன், அதனைப் பாடசாலையிலேயே செய்ய வைக்க வேண்டும்.

விசேடம் / முக்கிய குறிப்பு:

இதன் பதிப்புரிமை மேல் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு உரியதாகும். இந்த நூலையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ எடுத்தல், அச்சிடுதல், மறுபிரசுரம் செய்தல் அல்லது விற்பனை செய்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

விசாரணைகள்: மேல் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பக் கல்விப் பிரிவு

மேல் மாகாணக் கல்வித் திணைக்களம் - ஆரம்பக் கல்விப் பிரிவு

# மேல்மாகாண கல்வித்திணைக்களம்
# ஆரம்ப பிரிவு
# தமிழ்
# தரம்-04

**தேர்ச்சி : R1 , W1**

**பாடஉள்ளடக்கம் : ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

**பின்வரும் சொற்களை படத்துடன் வாசிக்க அறிமுகப்படுத்துங்கள்.**

1. மீன்
2. மான்
3. நீர்
4. நாய்
5. படகு

**பின்வரும் சொற்களை குழுவாக இணைந்து உரக்க வாசிக்க வழிப்படுத்துங்கள்.**

1. சிங்கம்
2. கோபம்
3. சகோதரன்
4. அருகில்
5. அமைதி

**பின்வரும் சொற்களை மாணவர்களை தனித்தனியே அருகில் அழைத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.**

1. தூரம்
2. அவன்
3. நாம்
4. கட்டளை
5. கூர்மை

**பின்வரும் சொற்களை மௌனமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.**

1. நாரை
2. தண்ணீர்
3. சத்தம்
4. வியப்பு
5. கரண்டி

**மேலே தரப்பட்ட சொற்களிலிருந்து ஏதாவது 5 சொற்களை சொல்வதெழுதுதல் எழுத வழிப்படுத்துங்கள்.**

1.......................................

2.......................................

3.......................................

4.......................................

5.......................................

**வாசிக்க வழிப்படுத்துங்கள்.**

1. கிளி
2. தலை
3. நீளம்
4. வாழை
5. புலி

**இச்சொற்களைப் பார்த்து உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள்.**

1. அழகு — ___________
2. வாள் — ___________
3. ஒளி — ___________
4. கிலி — ___________
5. பழம் — ___________

**காட்சிப்படத்தை பார்த்து நிகழ்காலத்தில் நிகழும் 3 வாக்கியங்களை எழுதுக.**



..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

**ஒலி வேறுபாட்டுச் சொற்களை அறிதல்.**
**ழகர, ளகர, லகர வேறுபாட்டுச் சொற்கள் எழுதப்பட்ட அட்டைகளைப் படத்துடன் அறிமுகப்படுத்துக.**
**அழகு, பலம், அளகு போன்ற சொற்களை வாசிக்க வழிப்படுத்துக.**

**தரப்பட்ட எழுத்துக்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

**(ழ, ல், ளி, ழை ,ழி)**

1. அணில் ப__________ம் சாப்பிட்டது.
2. பூனையின் வா___ அழகானது.
3. சூரிய ஒ___ தெரிந்தது.
4. ம___ துளி தெரித்தது.
5. கடதாசியை கி___த்தான்.

**சரியான சொல்லின் கீழ் கீறிடுக.**

1. காட்டில் வாழும் விலங்கு
   1. புலி 2. புளி 3. புழி
2. மிகவும் அழகான நிறம்
   1. நீலம் 2. நீளம் 3. நீழம்
3. மீன் பிடிக்கப் பயன்படுவது
   1. வலை 2. வளை 3. வழை
4. உடலின் முக்கிய உறுப்பு
   1. தலை 2. தளை 3. தழை
5. பச்சை நிறப் பறவை
   1. கிலி 2. கிளி 3. கிழி

**லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்களைக் இனங்கண்டு சிறிய வாக்கியங்கள் அமைத்தல்.**
**உம் :- வேலை :- அப்பா வேலை செய்தார்.**

1. தலை — ________________________________________
2. நீளம் — ________________________________________
3. வாளை — ________________________________________
4. கிளி — ________________________________________
5. வளி — ________________________________________

## தேர்ச்சி: ஒலி வேறுபாட்டுச் சொற்களை அறிதல் (னகர, ணகர வேறுபாடு)

**னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களை படத்துடன் அறிமுகப்படுத்துங்கள்.**
**பின்வரும் சொற்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.**

1. கனி
2. திணை
3. பண்
4. தினை
5. கணி

**பின்வரும் சொற்களைப் பார்த்து உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள்.**

1. கணி
2. தினை
3. பண்
4. பேன்
5. தண்மை

**பின்வரும் சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

**(ன், ண், ணை, னி, ணி)**

1. கண்ணன் க___ உண்டான்.
2. தங்கை பே___ எடுத்தாள்.
3. பாடலுக்கு ப___ அழகானது.
4. இராமன் க___ விட்டான்.
5. அவள் எண்களை க___த்தாள்.

**பின்வரும் னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களுக்கான பொருளை இணைக்க.**

| | |
|---|---|
| கனி | ஒரு தானியம் |
| திணை | கணித்தல் |
| பண் | பழம் |
| தினை | ஒழுக்கம் |
| கணி | இராகம் |

**பின்வரும் னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களைக் கொண்டு சிறிய வாக்கியங்கள் அமைக்க.**
உ.ம் :- கனி - கண்ணன் கனி பறித்தான்.

1. பண் — ________________________________
2. பன் — ________________________________
3. மனம் — ________________________________
4. பானம் — ________________________________
5. ஆனி — ________________________________

**தேர்ச்சி: ஒலி வேறுபாட்டுச் சொற்களை அறிதல் (றகர, ரகர வேறுபாடு)**

**றகர, ரகர வேறுபாட்டுச் சொற்களைப் படத்துடன் அறிமுகப்படுத்துங்கள்.**
**பின்வரும் சொற்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.**

1. அறம்
2. கறி
3. உறை
4. கூறை
5. நிரை

**பின்வரும் சொற்களைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

1. அரை
2. பாரை
3. கறி
4. நிறை
5. கரி

**கீழ்வரும் றகர, ரகர வேறுபாட்டு எழுத்துக்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**
**(ர, ரி, றி)**

1. காட்டில் க____டி வாழும்.
2. கடலில் ஊ____கள் உள்ளன.
3. ப____ வேகமாக ஓடும்.
4. அக்கா பூக்களை ப____த்தாள்.
5. கடவுள் இ____க்கம் கொண்டார்.

**பின்வரும் றகர, ரகர வேறுபாட்டு சொற்களுக்கரிய சரியான கருத்தினைத் தெரிந்து கோடிடுக.**

1. அருகு —

   (விளிம்பு / சதுரம் / உச்சி)
2. பொறி —

   (தீப்பொறி / அறிவு / அழகு)
3. இரக்கம் —

   (அழுகை / ஓட்டம் / மனவுருக்கம்)
4. அறுகு —

   (ஒரு புல் / விளிம்பு / பறித்தல்)

**றகர, ரகர வேறுபாட்டுச் சொற்களைக் கொண்டு சிறிய வாக்கியங்கள் அமைக்க வழிப்படுத்துங்கள்.**

உம் :- கரை - நாங்கள் கடற்கரைக்குச் சென்றோம்.

1. பாறை — ____________________
2. உறை — ____________________
3. கூரை — ____________________
4. கரி — ____________________
5. அரம் — ____________________

## தேர்ச்சி: ஒருமை, பன்மை சொற்கள் / வாக்கியங்கள்

**மாணவர்களுக்குப் பின்வரும் ஒருமை, பன்மைச் சொற்களை அறிமுகம் செய்யுங்கள். அதன் பின்னர் அதனை வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.**

| | | |
|---|---|---|
| 1. பத்திரிகை | - | பத்திரிகைகள் |
| 2. விரல் | - | விரல்கள் |
| 3. கோழி | - | கோழிகள் |
| 4. கடிதம் | - | கடிதங்கள் |
| 5. யானை | - | யானைகள் |
| 6. மீன் | - | மீன்கள் |
| 7. நிறம் | - | நிறங்கள் |
| 8. சித்திரம் | - | சித்திரங்கள் |

**மாணவர்களுக்கு வாசிக்கக் கொடுத்து அதனைப் பார்த்து எழுத வையுங்கள்.**

- அவன் சித்திரம் வரைந்தான்.
  அவன் சித்திரங்களை வரைந்தான்.

- மீன் நீந்தியது.
  மீன்கள் நீந்தின.

- தம்பி கடிதம் எழுதினான்.
  தம்பி கடிதங்களை எழுதினான்.

- யானை சென்றது.
  யானைகள் சென்றன.

**ஒருமைச் சொற்களை பன்மை சொற்களாக மாற்றித் தருக.**

1. விரல் — ___________
2. நிறம் — ___________
3. மீன் — ___________
4. யானை — ___________
5. கோழி — ___________

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. என் கையில் ஐந்து ___________ (விரல் / விரல்கள்) உள்ளன.
2. தபால்காரர் இரண்டு ___________ (கடிதம் / கடிதங்கள்) கொண்டு வந்தார்.
3. குளத்தில் நிறைய ___________ (மீன் / மீன்கள்) நீந்துகின்றன.
4. சுவரில் அழகான ___________ (சித்திரம் / சித்திரங்கள்) வரையப்பட்டுள்ளன.
5. மிருகக்காட்சி சாலையில் ___________ (யானைகள் / யானை) இருந்தன.

**சரியான விடையைத் தெரிவு செய்க**

1. பன்மை எது? — (கோழி / கோழிகள்)
2. ஒருமை எது? — (விரல் / விரல்கள்)
3. ஒருமை எது? — (சித்திரங்கள் / சித்திரம்)
4. பன்மை எது? — (மீன் / மீன்கள்)
5. ஒருமை எது? — (நிறம் / நிறங்கள்)

**பின்வரும் பந்தியை மாணவர்களை உரத்து வாசிக்க / மௌனமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.**



**பின்வரும் காட்சிப் படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்கள் எழுதுங்கள்.**



……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

## தேர்ச்சி: L2 S2 R2 W2

**ஒத்தகருத்து சொற்கள்**

**மாணவர்களுக்குப் பின்வரும் ஒத்த கருத்துச் சொற்களை எழுதிக் காட்சிப்படுத்தி அறிமுகம் செய்யுங்கள்.**

1. அழகு — வடிவு, வனப்பு
2. அறிவு — ஞானம், புத்தி
3. உடல் — மெய், சரீரம்
4. உண்மை — சத்தியம், வாய்மை
5. களிப்பு — உவகை, மகிழ்ச்சி
6. சினம் — கோபம், சீற்றம்
7. சுத்தம் — தூய்மை, புனிதம்
8. துக்கம் — துன்பம், இடர்
9. நித்திரை — துயில், உறக்கம்
10. உணவு — ஆகாரம், உண்டி

**மாணவர்களைக் வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள்.**

**அதன் பின்னர் மாணவர்களைக் குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவிற்கும் ஒத்த கருத்துச் சொற்கள் எழுதப்பட்ட அட்டைகள் ஒவ்வொன்றினை வழங்கி, தமது குழுக்களிடையே வாசித்துக் காட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.**

பயிற்சி

**பின்வரும் ஒத்த சொற்களுக்குச் சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

1. அழகு — (வடிவு / சினம்)
2. அறிவு — (துக்கம் / ஞானம்)
3. துன்பம் — (துக்கம் / உவகை)
4. நித்திரை — (துயில் / வடிவு)
5. உணவு — (உண்டி / கோபம்)
6. சினம் — (சீற்றம் / உறக்கம்)
7. களிப்பு — (மகிழ்ச்சி / இடர்)
8. உடல் — (மெய் / ஆகாரம்)

**இணைக்குக.**

| | |
|---|---|
| அழகு | மெய் |
| அறிவு | புனிதம் |
| உடல் | வடிவு |
| உண்மை | ஞானம் |
| களிப்பு | சத்தியம் |
| சினம் | உவகை |
| சுத்தம் | துயில் |
| துக்கம் | துன்பம் |
| நித்திரை | கோபம் |
| உணவு | ஆகாரம் |

**சரியான ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.**

1. புத்தி என்பதன் ஒத்த கருத்துச் சொல் என்ன? ___________
2. மெய் என்பதன் ஒத்த கருத்துச் சொல் என்ன? ___________
3. வனப்பு என்பதன் ஒத்த கருத்துச் சொல் என்ன? ___________
4. கோபம் என்பதன் ஒத்த கருத்துச் சொல் என்ன? ___________
5. சரீரம் என்பதன் ஒத்த கருத்துச் சொல் என்ன? ___________

## தேர்ச்சி – L3 S3 R3 W3

**பிராணிகளின் கொண்டாட்டம் எனும் பாடலை மாணவர்களுடன் இணைந்து இசை அசைவோடு பாடவும்.**

**பின்வரும் சொற்களை உரக்க வாசிக்கவும்.**

1. சிங்கம்
2. சிறுத்தை
3. குரங்கு
4. கரடி
5. குதிரை
6. மான்
7. சிவிங்கி

**மேலே தரப்பட்ட சொற்களை சொல்வதெழுதல் எழுத வழிப்படுத்துங்கள்.**

**பொருத்தமானதை இணையுங்கள்.**

| | |
|---|---|
| குரங்கு | சந்தனம் |
| மான் | பன்னீர் |
| சிலந்தி | தாளம் |
| கரடி | பாய் விரிக்கும் |
| குதிரை | வெள்ளை |
| யானை | மாலை |
| பூனை | மேளம் |

**“துணை” எனும் பாடலை மாணவர்களுடன் பாடுவதுடன் மாணவர்களை பாடலை உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள்.**

**பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புங்கள்.**

1. உடலுக்கு ________________________ உயிராகும்.
2. பாட்டுக்குத் துணை ________________________
3. பண்புக்குத் துணை ________________________
4. அரசுக்குத் துணை ________________________
5. பொருளுக்குத் துணை ________________________

(துணை, பண்ணாகும், அறமாகும், அமைச்சராகும், படிப்பாகும்)

**இப்பாடலிலுள்ள 5 சொற்களை சொல்வதெழுதல் எழுத வழிப்படுத்துங்கள்.**

**பின்வரும் விகடத்துணுக்குகளை இரசனையுடனும் அசைவுகளுடனும் மாணவர்கள் விரும்பும் வகையில் கூறுங்கள்.**

கழுதைக்கு பிடித்த ரொட்டி
சுவரொட்டி

வாயில் இலகுவாக நுழையும் பெயர்
வாழைப்பழம்

**இவ்வாறான விகடத்துணுக்குகளை மாணவர்களிடம் கேட்டறியுங்கள். சுயமாக கூற வழிப்படுத்துங்கள்.**

**"நன்றி" எனும் கதையை ஆசிரியர் கூற மாணவர்கள் செவிமடுப்பதற்காக வழிப்படுத்துங்கள்.**

**பின்வரும் வினாக்களை மாணவர்களிடம் கேட்டு விடை கூற வழிப்படுத்துங்கள்.**

1. புள்ளிமானிடம் காப்பாற்ற கூறிய பிராணி எது?
2. கட்டெறும்பு யாரின் காலில் ஏறியது?
3. புள்ளிமானிடம் கட்டெறும்பு யாது கூறியது?
4. கட்டெறும்பு கடித்ததற்கான காரணத்தை எவ்வாறு கூறியது?
5. இதில் யார் மன்னிப்புக் கேட்டது?

**இக்கதையில் வரும் 6 சொற்களை சொல்வதெழுதுதல் எழுத வழிப்படுத்துங்கள்.**

1…………………………

2…………………………

3…………………………

4…………………………

5…………………………

பின்வரும் சித்திரக்கதை தொடர்பாக மாணவர்களிடம் வினாக்களை வினவுங்கள். வினாக்களுக்கான விடைகளை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

## மலர் மணம்!



- “குழந்தைகளே கேளீர்“ எனும் பாடலை மாணவர்களுடன் இணைந்து பாடுங்கள்.
- மாணவர்களை குழுவாக பாடச் செய்யுங்கள்.
- புத்தாக்கக் கருவிகளைப் பயன்படுத்தி அசைவுடன் பாடச் செய்யுங்கள்.

**பின்வரும் பாடலடியைப் பார்த்து உறுப்பமைய எழுதுங்கள்.**

கண்மணிகாள் நீர்ச்சிரங்கு
காலில் வரும் கவனம்
கண்ணுறக்க மில்லாமற்
கதறியழ நேரிடும்.

**இடைவெளி நிரப்புவோம்.**

குடைபிடித்து ______________________
புத்தகமும் ______________________
குடுகுடென நடந்து ______________________
குழந்தைகளே ______________________

(கொண்டு, வரும், செருப்புமிட்டு, கேளீர்)

**பின்வரும் சொற்களை மௌனமாக வாசிக்க வழிப்படுத்துங்கள்.**

1. நுங்கு
2. தாகம்
3. தண்ணீர்
4. வண்டி
5. செய்தேன்

**மேலே தரப்பட்ட சொற்களை சொல்வதெழுதுதல் எழுத வழிப்படுத்துங்கள்.**

**“நுங்கு வண்டி“ எனும் பாடலை மாணவர்களை குழுவாக இணைந்து பாட வழிப்படுத்துங்கள்.**

**கீழே தரப்பட்ட சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புங்கள்.**

1. தாகம் ______________________ நுங்கு
2. தண்ணீர் ______________________ நுங்கு
3. தேகச் ______________________ நீங்கச்
4. ______________________ சின்ன நுங்கு

(செய்யும், தீர்க்கும், போல, சூடு)

- **பின்வரும் தகவல்களை வாசியுங்கள்.**

சங்கரனுக்கு ஒன்பது வயதாகின்றது. அவன் பிறந்த இடம் கண்டி. அவனது அப்பாவின் பெயர் சிவராமன். சங்கரன், பூங்குன்றம் தமிழ் வித்தியாலயத்தில் தரம் நான்கில் கல்வி கற்கின்றான். வகுப்பாசிரியரின் பெயர் க. தாமரைச்செல்வி. முத்திரை சேகரிப்பது அவனது பொழுதுபோக்காகும். அவன் **எனது வீட்டுத்தோட்டம்** என்ற தலைப்பில் சித்திரம் வரைந்து, போட்டிக்கு அனுப்பவுள்ளான்.

**உங்களைச் சங்கரனாகக் கருதிக்கொண்டு சித்திரப்போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.**

**சித்திரப்போட்டி விண்ணப்பப்படிவம்**

1. சித்திரத்தின் தலைப்பு :..........................................................
2. மாணவர் முழுப் பெயர் :..........................................................
3. பிறந்த திகதி :..........................................................
4. கற்கும் பாடசாலை :..........................................................
5. கற்கும் வகுப்பு :..........................................................
6. வகுப்பாசிரியரின் பெயர் :..........................................................

**மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன்.**

..........................................................

**மாணவரது கையொப்பம்**

தேர்ச்சி - L5 S5 R5 W5

**படத்துடன் கூடிய வாக்கியங்களை அறிமுகப்படுத்தி வாசித்துக் காட்டுங்கள். உ-மாக:- "பழம்" என்ற தலைப்பில் பழங்களைப் பற்றி ஆகிய சிறிய வாக்கியங்களை கூறச் செய்யுங்கள்.**

**பின்வரும் வாக்கியங்களை வாசியுங்கள் பின்னர் உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள்.**

அணில்

1. அணில் பழம் தின்னும்.
2. அணில் அழகான விலங்கு.
3. அணில் விரைவாக ஓடிச் செல்லும்.

**"எனது அம்மா" என்ற தலைப்பில் சில வாக்கியங்கள் கூறச் செய்யுங்கள்.**

**இடைவெளி நிரப்புங்கள்**

1. எனது அம்மா ______________________________
2. அவர் உணவு ______________________________ தருவார்.
3. எனக்கு ______________________________ சொல்லி தருவார்.
4. அம்மாவை ______________________________ மிகவும் பிடிக்கும்.

(எனக்கு , பாடம் , அழகானவர் , சமைத்து)

**"எனது பூனை" என்ற தலைப்பில் சில வாக்கியங்கள் எழுத வழிப்படுத்துங்கள்.**

**இடர்படும் மாணவர்களுக்கு உதவவும்.**

**மரபுச் சொற்கள் சிலவற்றை வாயால் கூறி மாணவர்களை திரும்பக் கூற வழிப்படுத்துங்கள். திரும்ப திரும்ப மாணவர்களிடம் வினவி கூறச் செய்யுங்கள்.**

**பின்வரும் இளமை மரபுப் பெயர்களை உறுப்பமைய எழுதுங்கள்.**

1. தவளை – குஞ்சு
2. புலி - குட்டி
3. யானை - போதகம்
4. பலா - கன்று
5. எருமை - கன்று

**பொருத்தமானதை இணையுங்கள்.**

| | |
|---|---|
| பலா | கன்று |
| எருமை | குஞ்சு |
| புலி | போதகம் |
| தவளை | கன்று |
| யானை | குட்டி |

**பின்வரும் சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புங்கள்.**

1. தென்னங் ________________________ நடப்பட்டன.
2. புலிக் ________________________ ஓடியது.
3. யானையின் ________________________ பிளிறியது.
4. வயலில் ________________________ நடப்பட்டது.
5. எருமை ________________________ சென்றது.

(கன்றுகள், நாற்று, குட்டி, போதகம், கன்றுடன்)

**பின்வரும் மரபுப் பெயர்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைத்து எழுதுங்கள்.**

உ_ம்:-

1. கன்று:- நான் மாங்கன்று நாட்டினேன்.
2. குட்டி — ________________________
3. குஞ்சு — ________________________

**பின்வரும் மரபுச் சொற்களை உறுப்பமைய எழுதுக.**

1. தென்னை - ஓலை
2. பனை - ஓலை
3. புல் - தாள்
4. வாழை - இலை
5. மா - இலை

**பின்வரும் மரபுச் சொற்களை பொருத்தமானதை இணையுங்கள்.**

| | |
|---|---|
| தென்னை | இலை |
| நெல் | இலை |
| வாழை | ஓலை |
| மா | தாள் |

**மேலே தரப்பட்ட மரபுச் சொற்களில் 5 சொற்களை சொல்வதெழுதுதல் எழுத வழிப்படுத்துங்கள்.**

**இணைமொழிகளை எழுதி அறிமுகப்படுத்துங்கள்.**

**இணைமொழிகள் சிலவற்றை மாறி மாறி கூறச் செய்யுங்கள்.**

**பின்வரும் இணைமொழிகளை வாசிக்க வழிப்படுத்துங்கள்.**

1. அக்கம் பக்கம்
2. அல்லும் பகலும்
3. ஓடி ஆடி
4. ஆற அமர
5. நகமும் சதையும்

**பின்வரும் இணைமொழிகளை உறுப்பமைய எழுதுங்கள்.**

1. அங்கும் இங்கும்
2. இன்ப துன்பம்
3. ஓடி ஆடி
4. அன்றும் இன்றும்
5. உயர்வு தாழ்வு

**பொருத்தமானதை இணைப்போம்.**

| | |
|---|---|
| இன்ப | தாழ்வு |
| ஓடி | சதையும் |
| அன்றும் | துன்பம் |
| நகமும் | ஆடி |
| உயர்வு | இன்றும் |

**இடைவெளி நிரப்புவோம்.**

1. அக்கம் ____________________________
2. ஆற ____________________________
3. கண்ணும் ____________________________
4. நகமும் ____________________________
5. அன்றும் ____________________________

( இன்றும் , சதையும் , கருத்தும் , அமர , பக்கம் )

**பின்வரும் இணைமொழிகளை வைத்து சிறிய வாக்கியங்கள் அமைக்க.**

உ.ம் :- ஓடி ஆடி :- நான் ஓடி ஆடி வேலை செய்தேன்.

1) இன்ப துன்பம் :- ____________________________________________________________

2) ஆற அமர :- ________________________________________________

3) அல்லும் பகலும் :- __________________________________________

**மேலே தரப்பட்டவற்றில் 5 சொற்களை வைத்து சொல்வதெழுதுதல் எழுத வழிப்படுத்துங்கள்.**

## எதிர்க்கருத்து சொற்கள்

பின்வரும் எதிர்கருத்துச் சொற்களை அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்தி சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள்.

**எதிர்க்கருத்து சொற்கள்**

அண்மை - சேய்மை
ஆக்கம் - அழிவு
இலாபம் - நட்டம்
சுத்தம் - அசுத்தம்
உயர்வு - தாழ்வு
உறவு - பகை
ஏற்றுமதி - இறக்குமதி
ஒளி - இருள்
சாதகம் - பாதகம்
ஞாபகம் - மறதி
நண்பன் - பகைவன்
ஆரம்பம் - முடிவு

**பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்து சொற்களை எழுதுக.**

1. அண்மை — __________
2. __________ — கேடு
3. இலாபம் — __________
4. __________ — முதுமை
5. உயர்வு — __________
6. __________ — பாதகம்

**சரியான எதிர்க்கருத்து சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அண்மை — (ஒளி, சுத்தம், சேய்மை)
2. ஆக்கம் — (அழிவு, நண்பன், உயர்வு)
3. இலாபம் — (ஒளி, ஞாபகம், நட்டம்)
4. இளமை — (பகை, சுத்தம், முதுமை)
5. உயர்வு — (தாழ்வு, இலாபம், ஒளி)

**சரியான சொற்களைப் பொருத்துக.**

| | |
|---|---|
| அண்மை | தாழ்வு |
| உயர்வு | இறக்குமதி |
| இலாபம் | சேய்மை |
| ஏற்றுமதி | நட்டம் |
| சுத்தம் | அசுத்தம் |

**பின்வரும் வாக்கியங்கள் சரியா (✓) பிழையா (X) என அடையாளமிடுக.**

1. ஒளியின் எதிர்ச்சொல் இருள் ( )
2. சுத்தத்தின் எதிர்ச்சொல் உறவு ( )
3. இலாபத்தின் எதிர்ச்சொல் இறக்குமதி ( )
4. இளமையின் எதிர்ச்சொல் முதுமை ( )
5. உறவின் எதிர்ச்சொல் இருள் ( )

**5 சொற்கள் சொல்வதெழுதுதல் வழங்குக.**

1. அசுத்தம்
2. இறக்குமதி
3. தாழ்வு
4. ஞாபகம்
5. நண்பன்

**தேர்ச்சி: எதிர்ப்பாற் சொற்கள்** (ஆண்பால் ,பெண்பால்)

கீழ்வரும் எதிர்ப்பாற் சொற்களை அறிமுகம் செய்து அதனை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுக.

சிறுவன் - சிறுமி
செல்வன் - செல்வி
சேவகன் - சேவகி
தம்பி - தங்கை
புத்திரன் - புத்திரி
நண்பன் - நண்பி
பண்டிதன் - பண்டிதை
சீமான் - சீமாட்டி
நாயகன் - நாயகி
மாணவன் - மாணவி
வீரன் - வீராங்கனை
மருமகன் - மருமகள்

**பின்வரும் எதிர்ப்பாற் சொற்களைக் கொண்ட வாக்கியங்களை அறிமுகம் செய்யுங்கள்.**

1. அவன் ஒரு வீரன்.

   அவள் ஒரு வீராங்கனை.

2. அவன் என்னுடைய தம்பி.

   அவள் என்னுடைய தங்கை.

3. நான் நல்ல சேவகன்.

   நான் நல்ல சேவகி.

4. அவரது மருமகன் வீட்டிற்கு வந்தார்.

   அவரது மருமகள் வீட்டிற்கு வந்தார்.

5. எனது புத்திரன் வீட்டிற்கு வந்தான்.

   எனது புத்திரி வீட்டிற்கு வந்தாள்.

**பொருத்தமான எதிர்ப்பாற் சொற்களை இணைக்குக.**

| | |
|---|---|
| சேவகன் | நாயகி |
| வீரன் | மருமகள் |
| நாயகன் | சேவகி |
| மருமகன் | வீராங்கனை |
| புத்திரன் | புத்திரி |

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சிறுவன் — _________________
2. செல்வன் — _________________
3. தம்பி — _________________
4. _________________ — பண்டிதை
5. _________________ — மாணவி

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. சீமான் என்ற சொல்லின் எதிர்ப்பாற் சொல் எது?
   அ) சீமாட்டி   ஆ) செல்வி   இ) புத்திரி
2. தங்கை என்ற சொல்லின் ஆண்பால் சொல் எது?
   அ) சிறுவன்   ஆ) நண்பன்   இ) தம்பி
3. வீரன் என்ற சொல்லின் பெண்பால் சொல் எது?
   அ) சேவகி   ஆ) வீராங்கனை   இ) மருமகள்
4. புத்திரன் என்பதன் எதிர்ப்பாற் சொல் எது?
   அ) நாயகி   ஆ) சீமாட்டி   இ) புத்திரி
5. மருமகள் என்பதன் ஆண்பால் சொல் எது?
   அ) நாயகன்   ஆ) மருமகன்   இ) பண்டிதன்

**சொல்வதெழுதுதல் வழங்குக.**

1. பண்டிதை
2. வீராங்கனை
3. சேவகன்
4. சிறுவன்
5. செல்வி

## திணை, பால், எண், இடம், காலம்

**மாணவர்களுக்கு திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றைத் தெளிவாக அறிமுகம் செய்க.**

**திணை**

**உயர்திணை**

- அன்னை
- சங்கரன்
- சலீம்
- பீட்டர்

**அஃறிணை**

- கடல்
- இலை
- யானை
- மேசை

**உயர்திணை, அஃறிணை சொற்கள் ஐந்து தருக.**

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

**கீழ்வரும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக.**

(மான், ஆசிரியர், பூ, வானம், அவர், கதிரை, ரேகா, தம்பி)

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |

**உயர்திணையா அஃறிணையா என எழுதுக.**

1. “தம்பி” என்பது ? → ____________________
2. “நாய்”என்பது? → ____________________
3. “மரம்”என்பது? → ____________________
4. “மருத்துவர்” என்பது? → ____________________
5. “புத்தகம்”என்பது? → ____________________
6. “குயில்”என்பது? → ____________________
7. “அரசன்”என்பது? → ____________________
8. “யானை”என்பது? → ____________________
9. “சங்கரன்” என்பது? → ____________________
10. “மேசை”என்பது? → ____________________

**பால்**

**திணை அடிப்படையில் இரு பால்களாகப் பிரிக்கலாம்.**

**1. உயர்திணைப் பால்**

**2. அஃறிணைப் பால்**

| **உயர்திணை** | **அஃறிணை** |
|---|---|
| 1. ஆண்பால் | 1. ஒன்றன்பால் |
| 2. பெண்பால் | 2. பலவின் பால் |
| 3. பலர்பால் | |

**உயர்திணை**

| **ஆண்பால்** | **பெண்பால்** | **பலர்பால்** |
|---|---|---|
| 1. சங்கரன் | 1. பாத்திமா | 1. மக்கள் |
| 2. கடலன் | 2. கமலா | 2. ஆண்கள் |
| 3. ரஹீம் | 3. விமலா | 3. பெண்கள் |
| 4. விமல் | 4. சங்கரி | 4. தேவர்கள் |
| 5. அவன் | 5. அவள் | 5. இவர்கள் |

**இதனை வாசிக்க வழிப்படுத்துக.**

**அட்டவணையை பூர்த்தி செய்க.**

| **ஆண்பால்** | **பெண்பால்** | **பலர்பால்** |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

அ.்.றிணை

1. ஒன்றன்பால்
2. பலவின்பால்

| ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|
| 1. மான் | 1. மான்கள் |
| 2. கல் | 2. கற்கள் |
| 3. பூ | 3. பூக்கள் |
| 4. கதிரை | 4. கதிரைகள் |
| 5. புத்தகம் | 5. புத்தகங்கள் |

அட்டவணையைப் பூர்த்தி செய்க

| ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

**ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலர்பால், பலவின்பால் வாக்கியங்களை எழுதுக.**

1. ஆண்பால் வாக்கியம்:

   → ______________________________________________

2. பெண்பால் வாக்கியம்:

   → ______________________________________________

3. ஒன்றன்பால் வாக்கியம்:

   → ______________________________________________

4. பலர்பால் வாக்கியம்:

   → ______________________________________________

5. பலவின்பால் வாக்கியம்:

   → ______________________________________________

**காலம்**

**காலம் மூன்று வகைப்படும்:**

1. **இறந்த காலம்**
2. **நிகழ் காலம்**
3. **எதிர் காலம்**

அ.

- நான் பாடம் படித்தேன்.
- நான் பாடம் படிக்கிறேன்.
- நான் பாடம் படிப்பேன்.

ஆ.

- அவள் எனது வீட்டுக்கு வந்தாள்.
- அவள் எனது வீட்டுக்கு வருகிறாள்.
- அவள் எனது வீட்டுக்கு வருவாள்.

**இதனை மாணவர்களுக்கு வாசித்துக்காட்டி வாசிக்க வழிப்படுத்துக.**

**தரப்பட்ட வாக்கியத்தை வாசித்து இடைவெளிகளை நிரப்புக.**

1. அரசன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான்.

    திணை: ________________ பால்: ________________
    எண்: ________________ இடம்: ________________
    காலம்: ________________

2. கிளி பழங்களை உண்ணுகின்றது.

    திணை: ________________ பால்: ________________
    எண்: ________________ இடம்: ________________
    காலம்: ________________

3. சிவப்பு நிறப்பூக்கள் அழகாக இருக்கின்றன.

    திணை: ________________ பால்: ________________
    எண்: ________________ இடம்: ________________
    காலம்: ________________

4. சிறுவர்கள் உணவு உண்கின்றார்கள்.

    திணை: ________________ பால்: ________________
    எண்: ________________ இடம்: ________________
    காலம்: ________________

**கீழே தரப்பட்டுள்ள இறந்தகால வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. நான் ஒரு படம் வரைந்தேன்.

   → ____________________________________________

2. கிளிகள் பறந்து சென்றன.

   → ____________________________________________

3. நாங்கள் வாசிகசாலைக்குச் சென்றோம்.

   → ____________________________________________

4. அவர்கள் வயலில் வேலை செய்தனர்.

   → ____________________________________________

5. நாங்கள் அண்ணாவையும் அன்புடன் வரவேற்றோம்.

   → ____________________________________________

**அட்டவணையைப் பூரணப்படுத்துக**

| வினையடி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| 1. படி | படித்தேன் | படிக்கின்றேன் | படிப்பேன் |
| 2. எழுது | | | |
| 3. வரை | | | |
| 4. விழு | | | |
| 5. இரு | | | |
| 6. ஏறு | | | |
| 7. ஓடு | | | |
| 8. கல் | | | |

# இடம்

**இடம் 3 வகைப்படும்:**

1. **தன்மை**
2. **முன்னிலை**
3. **படர்க்கை**

## 1. தன்மை

- நான் பேசினேன்.
- நாங்கள் பேசினோம்.

## 2. முன்னிலை

- நீ வந்தாய்.
- நீங்கள் வந்தீர்கள்.

## 3. படர்க்கை

- அவள் வந்தாள்.
- அவர் வந்தார்.
- அது வந்தது.
- அவை வந்தன.

**எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் வாக்கியத்தின் இன்றியமையாத உறுப்புகளாகும்.**

**தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றை இனங்கான்க.**

1. பசு பாலைத் தரும்
   i) எழுவாய்: ______________________
   ii) பயனிலை: ______________________
   iii) செயப்படுபொருள்: ______________________

2. சேரன் பழங்கள் வாங்கினான்.
   i) எழுவாய்: ______________________
   ii) பயனிலை: ______________________
   iii) செயப்படுபொருள்: ______________________

3. ரவி கவிதை படிக்கின்றான்.
   i) எழுவாய்: ______________________
   ii) பயனிலை: ______________________
   iii) செயப்படுபொருள்: ______________________

4. ரீமா பரிசு பெற்றாள்.
   i) எழுவாய்: ______________________
   ii) பயனிலை: ______________________
   iii) செயப்படுபொருள்: ______________________

5. தாத்தா பேரனை வாழ்த்தினார்.
   i) எழுவாய்: ______________________
   ii) பயனிலை: ______________________
   iii) செயப்படுபொருள்: ______________________

**கோடிட்ட இடத்தை பூர்த்தி செய்க**

உதாரணம்: நேற்று குமரன் (படி) படித்தான்

1. மாமா போன வருடம் இந்தியாவிற்குப் (போ) ______________________
2. என் தம்பி இப்போது வகுப்பில் (இரு) ______________________
3. அப்பா நாளைக்குப் புத்தகம் (வாங்கு) ______________________
4. மழை வரக் கண்டால் மயில் (ஆடு) ______________________
5. நேற்று கடும் மழை (பெய்) ______________________

**எழுவாய் அடைமொழி, பயனிலை அடைமொழி**

1. ***கறுப்புப்*** பூனை பால் குடித்தது.
   → எழுவாய் அடைமொழி

2. மேரி வீட்டிற்கு ***விரைவாக*** நடந்தாள்.
   → பயனிலை அடைமொழி

**பொருத்தமான அடைமொழிச் சொல்லைப் பயன்படுத்தி வாக்கியங்களை மீண்டும் எழுதுவோம்.**

உதாரணம்: பூனை பாலைக் குடித்தது.
***வெள்ளைப்*** பூனை பாலைக் குடித்தது.

1. புல் வெளியில் பசுக்கள் மேய்கின்றன.
   → ______________________________

2. பழம் கீழே விழுந்தது.
   → ______________________________

3. மயில் தோகை விரித்து ஆடுகின்றது.
   → ______________________________

4. சிறுமி நடனம் ஆடினாள்.
   → ______________________________

5. கிளி பழத்தைக் கொத்தியது.
   → ______________________________

(வெள்ளைப், பசுமையான, அழகான, நீலவண்ண, கனிந்த, பச்சைக்)

பெயர்ச்சொல் வகைகள்

பெயர்ச்சொல்லை ஆறு வகையாகப் பிரிக்கலாம்:

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. குணப்பெயர்
6. தொழிற்பெயர்

பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க

| பொருட்பெயர் | இடப்பெயர் | காலப்பெயர் | சினைப்பெயர் | குணப்பெயர் | தொழிற்பெயர் |
|---|---|---|---|---|---|
| புறா | கண்டி | நிமிடம் | தலை | இனிப்பு | ஓடுதல் |
| 1. | | | | | |
| 2. | | | | | |
| 3. | | | | | |
| 4. | | | | | |
| 5. | | | | | |

**பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையும் எழுதுங்கள்.**

1. தம்பியும் தங்கையும் கடைக்குப் போனார்கள்.
2. மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று பாடம் படித்தனர்.
3. கண்களிலிருந்து கண்ணீர் கசிந்தது.
4. ரவி வேலை தேடிக் கண்டிக்குச் சென்றான்.
5. நிலத்தில் இறங்கி மண்வெட்டி பிடித்துக் கொத்தினான்.

| பெயர்ச்சொல் | வினைச்சொல் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

**நிறுத்தக் குறிகள்**

**மாணவர்களுக்கு நிறுத்தக்குறிகளை அறிமுகம் செய்க.**

1. முற்றுப்புள்ளி (.)
2. காற்புள்ளி (,)
3. வினாக்குறி (?)
4. வியப்புக்குறி (!)

**பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுங்கள்**

மனிதனுக்கு பல விலங்குகள் உதவி புரிகின்றன

அவர் தம் கல்வியின் சிறப்புத்தான் என்னே

மரஞ் செடி கொடிகள் எவற்றைத் தருகின்றன

அந்தப் பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன

## இரட்டைக்கிளவி

**வாசிப்போம்**

- கணீர் கணீர்
- கம கம
- குடு குடு
- தள தள
- மட மட
- சல சல
- கல கல
- சட சட
- பள பள
- வழ வழ

**அடைப்பிலுள்ள இரட்டைக்கிளவிகளைக் கொண்டு இடைவெளி நிரப்புவோம்.**

(பளபள, கணீர்கணீர், சலசல, கமகம, மடமட)

1. ஆற்று நீர் _________ என ஓடியது.
2. தங்கச் சங்கிலி _________ என மின்னியது.
3. தம்பி _________ என நீர் குடித்தான்.
4. மல்லிகைப்பூ _________ என மணம் வீசியது.
5. கோயில் மணி _________ என ஒலித்தது.

**இரட்டைக்கிளவி உறுப்பமைய எழுதுவோம் / வாசிப்போம்**

கம கம _________ _________

கணீர் கணீர் _________ _________

குடு குடு _________ _________

தள தள _________ _________

மட மட _________ _________

வழ வழ _________ _________

பள பள _________ _________

**இரட்டைக்கிளவிகள் 5 ஐ எழுதுக.**

1. ______________________________
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________

**வாசிப்போம்**

1. கோயில் மணி கணீர் கணீர் என ஒலித்தது.
2. ஆற்று நீர் சலசல என்று ஓடியது.
3. மல்லிகைப்பூ கம கம என மணம் வீசும்.
4. பாட்டி குடுகுடு என நடந்தார்.
5. தம்பி மட மட என தண்ணீர் குடித்தான்.
6. தங்கச் சங்கிலி பளபள என மின்னியது.
7. அவள் வழ வழ என்று பேசினாள்.

**பழமொழிகள்**

**வாசிப்போம்**

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
2. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
3. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
5. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

**இடைவெளி நிரப்புவோம்**

1) உப்பிட்டவரை _________ நினை
2) ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து _________
3) ஐந்தில் வளையாதது ஐம்பதில் _________
4) அடிமேல் _________ அடித்தால் அம்மியும் நகரும்
5) அடம்பன் _________ திரண்டால் மிடுக்கு

பின்வரும் குறியீடுகளை வரைந்து, குறியீடுகளின் விளக்கத்தை எழுதுமாறு வலியுறுத்துங்கள்.








பின்வரும் சுருக்கக் குறியீடுகளை அறிமுகம் செய்து அதன் விரிவினையும் விளக்குக.

சுருக்கக் குறியீடுகள்

1. மு.ப - முற்பகல்
2. பி.ப - பிற்பகல்
3. பி.கு - பிற்குறிப்பு
4. கி.மு - கிறிஸ்துவுக்கு முன்பு
5. கி.பி - கிறிஸ்துவுக்கு பின்பு

**தொடர்மொழிக்கு ஒருமொழி**

1) அகரவரிசைப்பட்டி பொருள் கூறும் நூல்

அகராதி

2) முனிவர்கள் வசிக்கும் இடம்

ஆச்சிரமம்

3) வீண் செலவு செய்பவன்

ஊதாரி

